# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1997 - 2016 දෙසැම්බර් මස 09 වැනි සිකුරාදා - 2016.12.09

*1997 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 09 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 2222 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 2231 |


**கவனிக்க.-** (i) வர்ள்ட் லய்ப் லய்ன் யோகா நிறுவனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2016, நவெம்பர் மாதம் 18 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

(ii) அபிவிருத்தி (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் 2016, நவெம்பர் மாதம் 25 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி.வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2016, திசெம்பர் மாதம் 30 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2016, திசெம்பர் மாதம் 16 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2016 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 15 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானிகளில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

*1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.*

*1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).*

*1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகாண் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.*

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

*2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.*

*2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.*

*அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.*

*2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.*

***3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :***

*3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :.*

*3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகாண் நிலையிலேயே இருக்கும். தகுதிகாண் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.*

*3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.*

*3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.*

*3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகாண் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.*

*3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.*

*3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.*

*3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகாண் நிலையில் இருக்க வேண்டியதில்லை.*

*3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.*

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

*4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.*

*4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.*

*4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.*

*4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.*

**5. யுத்த சேவைச் சலுகை :**

*5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.*

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

*6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.*

*6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.*

*6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.*

*6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.*

*6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.*

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

*7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.*

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

*இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.*

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.*

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப்படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை ஆணைக்குழுவால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## அரசாங்க தகவல் திணைக்களத்தில் முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் அற்ற) பிரிவு - 01 (MN - 02 - 2006 - A) சேவை மட்டத்திற்கு உரித்தான இணையத்தள பகுப்பாளர் பதவிக்காக சேர்த்துக்கொள்ளல்

அரசாங்க தகவல் திணைக்களத்தில் இணையத்தள பகுப்பாளர் (சிங்களம்/ ஆங்கிலம்/ தமிழ்) மொழியில் அதிகாரிகள் மூவர் வீதம் இலக்கம் 2 இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரர்களிடத்தில் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **தெரிவுசெய்யப்படும் முறை.**- விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூரணமாகக் கொண்ட விண்ணப்பதாரிகளில் அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகத்தினால் அனுமதி வழங்கப்பட்ட நிறுவனம் ஒன்றின் மூலம் நடாத்தப்படும் எழுத்துமூலப் போட்டிப் பரீட்சையின் பெறுபேற்றின் அடிப்படையில் காட்டப்படும் தகைமைச் சான்றிதழ்களின்கீழ் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

1.1 *எழுத்துமூலப் பரீட்சை :*

| பதவி | பாடங்கள் | மொத்தப் புள்ளிகள் | சித்தி மட்டம் |
|---|---|---|---|
| இணையத்தள பகுப்பாளர் | சமூக ஊடகங்கள் மற்றும் பத்திரிகைக் கலை | 100 | 40 |
| | மொழித் தகைமை மற்றும் பத்திரிகைக் கலை | 100 | 40 |

2. **தேவையான தகைமைகள் :**

2.1 திறந்த முறையில் தெரிவு

2.2 *தேர்ந்தெடுக்கும் தரம் :* III ஆம் தரம்

2.3 *கல்வித் தகைமை.*- சிங்களம்/ தமிழ்/ ஆங்கிலம், கணிதம் மற்றும் மேலும் இரண்டு திறமைச் சித்திகளுடன் (C) ஒரே தடவையில் 6 பாடங்களில் க. பொ. த. சாதாரணதரப் பரீட்சையில் சித்தியெய்தியிருத்தல் வேண்டும் ; மற்றும்

க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் அனைத்துப் பாடங்களிலும் (பொது அறிவுப் பரீட்சை தவிர்ந்த) ஒரே தடவையில் சித்தி அடைந்திருத்தல் வேண்டும். (பழைய பாடவிதானங்களின்கீழ் 3 பாடங்களில் ஒரே தடவையில் சித்தி அடைந்திருக்க வேண்டும்.)

2.4 *தொழிற்றகைமை.*- இரண்டாம் நிலை மற்றும் முதன்நிலை கல்வியியல் ஆணைக்குழுவின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றின் மூலம் வழங்கப்படுகின்ற தகவல் தொழில்நுட்பம் தொடர்பான டிப்ளோமாவினைப் பெற்றிருத்தல் அல்லது தகவல் தொழில்நுட்பத் துறையில் அதற்கும் மேலான தகைமையைப் பெற்றிருத்தல் ; அல்லது

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட பொது மக்கள் தொடர்பாடல் தொடர்பாக டிப்ளோமா ஒன்றினைப் பெற்றிருத்தல் மற்றும் பொது மக்கள் தொடர்பாடல் துறையில் அதற்கும் மேலான தகைமையினைப் பெற்றிருத்தல்.

2.5 *அனுபவங்கள்.*- கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

2.6 *உடற்றகைமை.*- அனைத்து விண்ணப்பதாரிகளும் இலங்கையில் ஏதேனும் ஒரு பிரதேசத்தில் வேலை செய்வதற்கும், பதவியின் பணியினைச் செயற்படுத்துவதற்கும் உகந்த உடல் நிலை மற்றும் உள்ளார்ந்த நிலையினையும் கொண்டிருத்தல் வேண்டும்.

2.7 *ஏனைய தகைமைகள்.*- இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

சிறந்த குணநலம் பொருந்தியவராக இருத்தல் வேண்டும்.

குறித்த பதவிக்குச் சேர்த்துக்கொள்ளப்படுவதற்காக 2.3 மற்றும் 2.4 இன் அடிப்படையில் தேவையான தகைமைகளை 2016.10.01 ஆந் திகதிக்கு அனைத்து விதத்திலும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

3. **வயது** :

3.1 குறைந்த வயது.- 18 வயது.

3.2 அதிகூடிய வயது.- 30 வயது.

4. **பதவியின் தன்மை**.- இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதியத்துடன் கூடியது. குறித்த நபர்கள் ஓய்வூதியத் திட்டங்களுக்கு தமது பங்களிப்பைச் செய்தல் வேண்டும்.

5. **சம்பளம்** :

சம்பள இலக்கம்.- MN2 - 03/ 2016.

சம்பளத் திட்டம்.- ரூ. 28,940 - 10 x 300 - 11 x 350 - 10 x 560 - 10 x 660 - 47,990.

6. நியமனம் ஒரு வருட பதில் கடமைக் (Acting period) காலத்துக்கு உட்பட்டது. அரசாங்க தகவல் திணைக்களத்தின் இணையத்தள பகுப்பாளர் பதவியின் III ஆம் தரத்துக்கு இணைத்துக்கொண்டு 3 வருடங்களுக்குள் இணைத்துக்கொள்வதற்கான முதல் தடைத்தாண்டல் பரீட்சையில் சித்தியெய்தியிருத்தல் வேண்டும்.

7. பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 07/ 2007 இன் அடிப்படையில் மற்றும் அத்துடன் தொடர்பான சுற்றறிக்கைகளின் அடிப்படையில் பதவிக்கு உரித்தான மட்டத்தில் மொழித் தகைமையினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

8. அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறைச் சட்டதிட்டங்களுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவைக்கும், அரசாங்கத்தின் நிதி ஒழுங்குவிதிகளுக்கும், திணைக்களத்தின் மற்றைய சட்டதிட்டங்களுக்கும் இந்நியமனம் உட்பட்டது.

9. **விண்ணப்பிக்கும் முறை** :

(1) விண்ணப்பங்கள் 2017.01.09ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் "அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலப்பனை மாவத்தை, கொழும்பு 05" எனும் விலாசத்துக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்க வேண்டும். அதற்குப் பின்னர் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(2) விண்ணப்பிக்க வேண்டிய மாதிரி விண்ணப்பப்படிவம் இவ்வறிவிப்பின் இறுதியில் காணப்படுகின்றது. விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பப்படிவங்களை A4 அளவிலான தாளில் தயாரித்து தமது சொந்தக் கையெழுத்தில் நிரப்ப வேண்டும்.

(3) பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களைத் தபால் உறையில் இட்டு, குறித்த தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் "அரசாங்க தகவல் திணைக்களத்தின் இணையத்தள பகுப்பாளர் பதவிக்கு இணைத்துக்கொள்ளல்" என்று குறிப்பிடுதல் வேண்டும்.

(4) மாதிரி விண்ணப்பப்படிவத்தைப் போன்று அமையாத விண்ணப்பப்படிவங்கள், முழுமைப்படுத்தப்படாத விண்ணப்பப்படிவங்கள் அறிவித்தல் விடுக்கப்படாமல் நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவம் காணாமல் போதல் அல்லது தாமதித்து கிடைத்தல் தொடர்பில் கிடைக்கப்பெறும் முறைப்பாடுகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

10. **பிழையான தகவல்களை வழங்குதல்**.- உங்களால் அனுப்பப்படும் விண்ணப்பப்படிவங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் தகவல்கள் பொய்யெனவோ அல்லது பிழையெனவோ சேர்த்துக்கொள்வதற்கு முன்னர் வெளிப்படுத்தப்பட்டால் உங்கள் விண்ணப்பம் நிராகரிக்கப்படும். அவ்வாறாகவே, குறித்த தகவல்களில் ஏதேனும் பொய்யெனவோ அல்லது பிழையெனவோ சேர்த்துக்கொண்டதன் பின்னர் வெளிப்படுத்தப்பட்டால் குறித்த விதிமுறைகளுக்கு அமைய சேவையில் இருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

11. இவ்வறிவித்தலில் குறிப்பிடப்படாத ஏதேனும் விடயம் தொடர்பில் இறுதித் தீர்மானம் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நியதிகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும். அதேபோன்று வெற்றிடங்களை நிரப்புதல் அல்லது நிரப்பாது விடுதல் அல்லது வெற்றிடங்களில் சிலவற்றை நிரப்புதல் தொடர்பான இறுதித் தீர்மானம் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படும்.

12. இவ்வறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்றில் ஏதேனுமொரு பிரச்சினை எழும் பட்சத்தில் சிங்கள மொழியிலான அறிவித்தலே ஏற்றுக்கொள்ளப்படும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் வேண்டுகோளின் பேரில்,

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட,
அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகம்,
அரசாங்க தகவல் திணைக்களம்.

அரசாங்க தகவல் திணைக்களம்,
இல. 163, கிருலப்பனை மாவத்தை,
கொழும்பு 5,
2016, நவெம்பர் 18.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**அரசாங்க தகவல் திணைக்களத்தில் முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் அற்ற) பிரிவு - 01 (MN - 02 - 2006-A) சேவை மட்டத்திற்கு உரித்தான இணையத்தள பகுப்பாளர் பதவிக்காக சேர்த்துக்கொள்ளல்**

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

1. மொழி :
   - சிங்களம் - 01
   - தமிழ் - 02
   - ஆங்கிலம் - 03

(ஏற்புடைய இலக்கத்தைக் கூட்டில் குறிப்பிடவும்.)

2. தனிப்பட்ட தகவல்கள் :

2.1 முதலெழுத்துக்களுடன் பெயர் : Mr./Mrs./Miss. (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
Ex : Mr./Mrs./Miss. SILVA, A.B.

2.2 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

2.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :----.

2.4 தனிப்பட்ட முகவரி (சிங்களம்/ தமிழ்) :----.

2.5 பால் :
ஆண் - 0
பெண் - 1

(ஏற்புடைய இலக்கத்தைக் கூட்டில் குறிப்பிடவும்)

2.6 சிவில் அந்தஸ்து :
விவாகமாகாதவர் - 1
விவாகமானவர் - 2

(ஏற்புடைய இலக்கத்தைக் கூட்டில் குறிப்பிடவும்)

2.7 இனம் :
(சிங்களவர்-1, இலங்கைத் தமிழர்-2,
இந்தியத் தமிழர்-3, முஸ்லிம்கள்-4, வேறு-5)

(ஏற்புடைய இலக்கத்தைக் கூட்டில் குறிப்பிடவும்)

2.8 தேசிய ஆள் அடையாள அட்டை இல. :

2.9 பிறந்த திகதி :

ஆண்டு :----. மாதம் :----. திகதி :----.

2.10 விண்ணப்ப முடிவுத் திகதியின்போது வயது :

வருடங்கள் :----. மாதங்கள் :----. நாட்கள் :----.

2.11 தொலைபேசி இல. (இருப்பின்) :----.

3. கல்வித் தகைமைகள் :

க. பொ. த. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றிய வருடம் :----.
சுட்டிலக்கம் :----.

| பாடம் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

க. பொ. த. உயர் தரப் தரப் பரீட்சைக்குத் தோற்றிய வருடம் :----.
சுட்டிலக்கம் :----.

| பாடம் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |

4. தொழிற்றகைமைகள் :----.
-------------------------------------------------------
-------------------------------------------------------

5. விண்ணப்பதாரியின் உறுதியுரை :
மேலே குறிப்பிடப்பட்ட விபரங்கள் யாவும் உண்மையானவை எனவும், சரியானவை எனவும் உறுதிமொழிகின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

6. கையொப்பத்தை உறுதிபடுத்தல் :
மேற்கூறப்பட்ட தகவல்களை வழங்கும் திரு./ திருமதி/ செல்வி .................................... அவர்களை நான் தனிப்பட்ட ரீதியில் அறிவேன். ........................................... ஆந் திகதி என் முன்னிலையில் அவர் தமது கையொப்பத்தை இட்டார் எனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
கையொப்பத்தை உறுதிசெய்த அதிகாரியின் கையொப்பம்.

பெயர் :----.
வகிக்கும் பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

(பாடசாலை அதிபர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், நீதிபதி, நொத்தாரிசு, முப்படைகளின் அதிகாரம்பெற்ற அதிகாரி அல்லது ரூ. 22,935 அல்லது அதற்கு மேல் மாதாந்த வருமானம் பெறும் அரசாங்க நிரந்தரப் பதவி வகிக்கும் அலுவலர் ஆகியோரால் அத்தாட்சிப்படுத்தப்படலாம்.)

12-279

## அரசாங்க சேவைகள் ஆணைக்குழு

### பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களத்தின் நிறைவேற்று சேவைகள் வகுதியின் பிரதிப் பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் - 2016

பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களத்தின் நிறைவேற்றுச் சேவைகள் வகுதியின் பிரதிப் பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் 2 இல் நிலவுகின்ற ஒரு வெற்றிடத்துக்காக தகுதியுடையவர் ஒருவரைத் தெரிவுசெய்து கொள்வதற்காக அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் பணிப்பின் பேரில் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ்வறிவித்தலின் இறுதியில் உள்ள மாதிரிப் படிவத்திற்கமைவாக தயார் செய்யப்பட்ட விண்ணப்பங்கள் பின்வரும் திகதி அல்லது அதற்கு முன்னராக "செயலாளர், நீதி அமைச்சு, மீயுயர் நீதிமன்றக் கட்டிடத் தொகுதி, கொழும்பு 12" என்னும் முகவரிக்குக் கிடைக்கக்கூடியவாறு பதிவு அஞ்சலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களத்தின் - நிறைவேற்றுச் சேவைகள் வகுதியின் பிரதிப் பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் பதவிக்காக ஆட்சேர்ப்புச் செய்தல்" எனத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

(அ) விண்ணப்பங்கள் கோரப்படுகின்ற இறுதித் திகதி 2017.01.09 ஆகும்.

**குறிப்பு**.- விண்ணப்பமொன்று அல்லது அது சம்பந்தப்பட்ட கடிதமொன்று அஞ்சலில் காணாமற் போனதாக அல்லது தாமதமானதாக செய்யப்படுகின்ற முறைப்பாடுகள் கவனத்திற்கொள்ளப்படமாட்டாது. இறுதித் திகதிவரை விண்ணப்பங்களைத் தாமதம் செய்வதனால் ஏற்படுகின்ற நட்டங்களை விண்ணப்பதாரர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

1. **சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் முறை**.- அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படுகின்ற தகுதிகளை மதிப்பிடும் நேர்முகப் பரீட்சைச் சபையொன்றின் மூலம் நடாத்தப்படுகின்ற தகுதிகளை மதிப்பிடும் நேர்முகப் பரீட்சையொன்றின் மூலம் பெற்றுக்கொடுக்கப்படுகின்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிடங்களின் எண்ணிக்கையின்படி திறமைத் தொடர் வரிசையில் தெரிவுசெய்யப்படுவர். நியமிக்கப்படுகின்ற எண்ணிக்கை மற்றும் நியமனம் நடைமுறைப்படுத்தப்படுகின்ற திகதி என்பன அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளையின்படி தீர்மானிக்கப்படும்.

2. **சேவை நிபந்தனைகள்** :

(i) இப்பதவி நிரந்தரமானது.

(ii) இப்பதவியில் நியமனம் பெறுகின்ற அலுவலர்கள் மூன்று (3) வருட நன்னடத்தைக் காலத்திற்கு உட்படுவதுடன் அம்மூன்று (3) வருட காலத்திற்குள் முதலாம் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.

(iii) பொது நிருவாகச் சுற்றறிக்கை 1/ 2014 மற்றும் இடைநேர்விளைவான சுற்றறிக்கைகளின்படி மற்றைய அரச கரும மொழி பற்றிய தேர்ச்சி மட்டத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

(iv) அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடவடிக்கை முறை விதிகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவைக்கும், அரசாங்கத்தின் நிதி ஒழுங்குவிதிகளுக்கும், திணைக்கள ஏனைய கட்டளைகளுக்கும் இந்நியமனம் உட்படுகிறது.

3. **சம்பள அளவுத்திட்டம்**.- இப்பதவிக்கு 3/ 2016 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கையின்படி SL 01-2016 ரூபா 47,615 - 10 x 1,335 - 8 x 1,630 - 17 x 2,170 - ரூபா 1,10,895 (மாதாந்த) சம்பள அளவுத்திட்டத்தின் 12 ஆம் சம்பளப் படிநிலை உரித்தாகிறது. (2016.02.25 ஆந் திகதிய பொது நிருவாக சுற்றறிக்கை இல. 03/ 2016 இன் ஏற்பாடுகளுக்கு அமைவாக அட்டவணை II இல் குறிப்பிட்டுள்ளவாறு சம்பளம் உரித்தாகிறது.)

4. **தகைமைகள்** :

(i) *கல்வித் தகைமைகள்/ தொழில் தகைமைகள்*.- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டமொன்றைப் பெற்றிருத்தல் அல்லது உயர் நீதிமன்றத்தின் சட்டத்தரணி ஒருவராக சத்தியப்பிரமாணம் செய்திருத்தல்.

(ii) *அனுபவம் :*

(அ) அரசாங்க சேவையின் நிறைவேற்றுச் சேவைகள் வகுதியின் அலுவலர் ஒருவராக 10 வருட உயிர்ப்பான மற்றும் திருப்திகரமான சேவைக்காலத்தைக் கொண்டுள்ள அலுவலர் ஒருவராக இருத்தல் ;

அல்லது

(ஆ) அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் நிறைவேற்று மட்டத்தின் அலுவலர் ஒருவராக 10 வருடங்களுக்குக் குறையாத நிருவாக அலுவல்கள் பற்றிய அனுபவமுடைய ஒருவராக இருத்தல் (10 வருட சேவை அனுபவத்தை உறுதிப்படுத்துவதற்காக ஏற்பாட்டு நிதியத்திற்கு உதவுதொகை வழங்கப்பட்டிருப்பதை நிரூபிக்க வேண்டும்.)

அல்லது

(இ) உயர் நீதிமன்றத்தின் சட்டத்தரணி ஒருவராக சத்தியப்பிரமாணம் செய்துகொள்ளப்பட்டதன் பின்னர் 10 வருடங்களுக்குக் குறையாத உயிர்ப்பான தொழில் அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

**குறிப்பு**.- குடியியல் சட்டம் பற்றிய சிறந்த அறிவு மற்றும் அனுபவத்தைக் கொண்டுள்ள ஆளொருவராக இருத்தல் விசேட தகைமையொன்றாகக் கருதப்படுகிறது.

5. **வயதெல்லை**.- விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு 35 வயதுக்குக் குறையாதவராகவும் 50 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரசாங்க சேவையிலுள்ள விண்ணப்பதாரர்களுக்கு இவ்வுச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.)

6. **உடற்றகைமைகள்**.- ஒவ்வொரு விண்ணப்பதாரியும் இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவை செய்வதற்கும் பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமான உடல் மற்றும் உள ரீதியில் தகுதியுடையவராக இருக்க வேண்டும்.

7. **பிற தகைமைகள்** :

(i) விண்ணப்பதாரர்கள் இலங்கைப் பிரசைகளாக இருத்தல் வேண்டும்.

(ii) விண்ணப்பதாரர்கள் சிறந்த நல்லொழுக்கம் உடையவர்களாக இருத்தல் வேண்டும்.

(iii) பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காகத் தேவைப்படுகின்ற சகல தகைமைகளையும் பூர்த்தி செய்ய வேண்டுமென விண்ணப்பங்கள் கோரப்படுகின்ற அறவித்தலில்/ வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிடப்படுகின்ற இறுதித் திகதிக்கு அத்தகைமைகளை சகல விதத்திலும் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

(iv) தமிழ் மொழி பற்றிய அறிவைப் பெற்றிருப்பது மேலதிக தகைமையொன்றாகும்.

8. **திறன்களை மதிப்பிடும் நேர்முகப் பரீட்சை**.- அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்தின் மீது நியமிக்கப்படுகின்ற தகைமைகளை மதிப்பிடும் நேர்முகப் பரீட்சையொன்றின் மூலம் புள்ளிகள் வழங்கப்படுவதுடன் அப்பரீட்சையின் போதே தகைமைகளும் பரீட்சித்துப் பார்க்கப்படும்.

9. நேர்முகப் பரீட்சையின்போது புள்ளிகள் வழங்கப்படும் முறை :

| | விடயம் | புள்ளிகள் | உச்ச புள்ளிகள் |
|---|---|---|---|
| 1 | **மேலதிக கல்வித் தகைமைகள்** | | |
| | பட்டப்பின் படிப்பு | 15 | |
| | பட்டப்பின் படிப்பு டிப்ளோமா | 10 | 25 |
| | (உயர் தகைமைக்காக மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும்) | | |
| | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பெற்ற விசேட பட்டம் | | |
| | - முதலாம் வகுப்பின் சித்திக்காக | 10 | |
| | - இரண்டாம் வகுப்பின் உயர் சித்திக்காக | 08 | |
| | - இரண்டாம் வகுப்பின் கீழ் சித்திக்காக | 06 | |
| | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பெற்ற சாதாரண பட்டம் | | |
| | - முதலாம் வகுப்பின் சித்திக்காக | 09 | |
| | - இரண்டாம் வகுப்பின் உயர் சித்திக்காக | 07 | |
| | - இரண்டாம் வகுப்பின் கீழ் சித்திக்காக | 05 | |

| | விடயம் | புள்ளிகள் | உச்ச புள்ளிகள் |
|---|---|---|---|
| | சட்டக் கல்லூரியின் இறுதி ஆண்டின் முதலாம் வகுப்பின் சித்திக்காக | 08 | |
| | சட்டக் கல்லூரியின் இறுதி ஆண்டின் இரண்டாம் வகுப்பின் சித்திக்காக | 06 | |
| | **குறிப்பு**.- மேற்குறித்தவாறு வகுப்பு சித்தியொன்றுடன் இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்திருந்தால் மாத்திரமே புள்ளிகள் வழங்கப்படும். | | |
| 2 | **மேலதிக தொழில் தகைமைகள்**<br>6 மாதங்களுக்குக் குறையாத டிப்ளோமா கற்கை நெறி யொன்றுக்காக<br>(டிப்ளோமா ஒன்றுக்கு 6 புள்ளிகள் வீதம்)<br>3 மாதங்கள் மற்றும் 6 மாதங்களுக்கிடையே தராதரப்பத்திர கற்கைநெறி ஒன்றுக்காக<br>(கற்கைநெறி ஒன்றுக்கு 3 புள்ளிகள் வீதம்) | | 30 |
| 3 | **மேலதிக அனுபவம்**<br>விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தலின் 4 ஆம் பந்தியின் அனுபவத்தின்கீழ் காட்டப்பட்டுள்ள அடிப்படைத் தகைமைகள் தொடர்பில் பத்து (10) வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவம்<br>(ஒரு வருடத்திற்கு 5 புள்ளிகள் வீதம் உச்ச புள்ளிகள் 30 ஆகும்.) | | 30 |
| 4 | **ஆங்கில மொழித் தேர்ச்சி**<br>ஆங்கில மொழி மூலத்தில் கற்ற பட்டப் பின்படிப்பு/ பட்டப் பின் டிப்ளோமா/ பட்டம் | 05 | 05 |
| | அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் ஆங்கில மொழி பற்றிய டிப்ளோமா கற்கைநெறியொன்றுக்காக<br>(கற்கைநெறி காலப்பகுதி 6 மாதங்களுக்குக் குறையாத) | 03 | |
| | அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் ஆங்கில மொழி பற்றிய தராதரப்பத்திர கற்கை நெறியொன்றுக்காக<br>(கற்கைநெறி காலப்பகுதி 3 மாதங்களுக்குக் குறையாத) | 02 | |
| 5 | **தமிழ் மொழித் தேர்ச்சி**<br>கல்விப் பொதுத் தராதரப்பத்திர சாதாரண தரத்தை தமிழ் மொழி மூலத்தில் கற்றிருத்தல் | 05 | 05 |
| | அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றின் தமிழ் மொழி பற்றிய டிப்ளோமா கற்கை நெறியொன்றுக்காக<br>(கற்கை காலப்பகுதி 6 மாதங்களுக்குக் குறையாத) | 03 | |
| | அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றின் தமிழ் மொழி பற்றிய தராதரப்பத்திர கற்கை நெறியொன்றுக்காக | 02 | |
| 6 | நேர்முகப் பரீட்சையில் காட்டப்படுகின்ற திறமை | 05 | 05 |
| | மொத்தம் | | 100 |

10. (i) விண்ணப்பம் 22-29 செ. மீ. அளவிலான A4 அளவு தாளில் தயார் செய்யப்பட வேண்டுமென்பதுடன், 1 தொடக்கம் 13 வரையிலான தலைப்புக்கள் முதலாம் பக்கத்திலும் 14 தொடக்கம் இறுதி வரையிலான தலைப்புக்கள் இரண்டாம் பக்கத்திலும் உள்ளடங்குகின்றவாறு தயார்செய்ய வேண்டும். அதற்கான தகவல்களை தனது கையெழுத்தினாலேயே தெளிவாக உள்ளடக்க வேண்டும். சகல விதத்திலும் சரியாகப் பூர்த்தி செய்யப்படாத அடிப்படைத் தகைமைகள் இல்லாத, உரிய திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறுகின்ற மற்றும் மாதிரி விண்ணப்பப்பத்திரத்திற்கமைவாக இல்லாத விண்ணப்பங்கள்

எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பத்தின் பிரதியொன்றைத் தம்வசம் வைத்திருப்பது பயனுள்ளதாகவிருக்கும். மேலும் பூர்த்தி செய்யப்படுகின்ற விண்ணப்பம் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைவாக உள்ளதா என விண்ணப்பதாரர் பரிசீலனை செய்து பார்க்க வேண்டுமெனவும் அவ்வாறு இல்லாவிடின் விண்ணப்பம் நிராகரிக்கப்படுமெனவும் மேலும் அறிவுறுத்தப்படுகின்றது. விண்ணப்பங்களை இத்துடன் உள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாகத் தயார் செய்யவும். விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றமை அறிவிக்கப்பட மாட்டாது.

**கவனிக்க :**

(அ) விண்ணப்பத்துடன் எந்தவோர் ஆவணமோ அல்லது அதன் பிரதியொன்றோ இணைக்கப்படலாகாது.
(ஆ) வேண்டப்படும்போது ஆவணங்களைச் சமர்ப்பிக்கத் தவறுகின்ற விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் கருத்திற்கொள்ளப்பட மாட்டாது.

(ii) அரசாங்க சேவையின்/ மாகாண அரசாங்க சேவையின்/ அரசாங்கக் கூட்டுத்தாபனங்களில் உள்ள அலுவலர்கள் தமது விண்ணப்பங்களைத் தமது திணைக்கள/ நிறுவனத் தலைவர்களினூடாக அனுப்புதல் வேண்டும்.

11. அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடவடிக்கை முறை விதிகள், காலத்துக்குக் காலம் அரசாங்க சேவை தொடர்பில் வழங்கப்பட்டுள்ள சுற்றறிக்கைகள் மற்றும் பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களத்தின் நிறைவேற்றுச் சேவைகள் வகுதிக்கான ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறையின் நிபந்தனைகள் இப்பதவிக்கு ஏற்புடையதாகிறது.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் பணிப்பின் பேரில்,

பத்மசிறி ஜயமான்ன,
செயலாளர்,
நீதி அமைச்சு.

2016, நவெம்பர் 17.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**அரசாங்க சேவைகள் ஆணைக்குழு**

பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களத்தின் நிறைவேற்றுச் சேவைகள் வகுதியின் பிரதிப் பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் பதவி

இலக்கம் :......................
(அலுவலக உபயோகத்துக்காக)

1. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :----.
முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

(ஆ) முழுப்பெயர் (சிங்களம்/ தமிழ்) :----.
முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

2. நிரந்தர முகவரி (சிங்களத்தில்/ தமிழில்) :----.

3. நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

4. தொலைபேசி இலக்கம் :----.

5. தேசிய ஆள் அடையாள அட்டை இல. : | | | | | | | | | | | | |

6. பால் (ஆண்/ பெண்) :----.

7. பிறந்த திகதி :

ஆண்டு :----. மாதம் :----. திகதி :----.

8. விவாகமானவரா/ விவாகமாகாதவரா என்பது :----.

9. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்கு வயது :----.

வருடங்கள் :----. மாதங்கள் :----. நாட்கள் :----.

10. இனம் :----.

11. பட்டம் பற்றிய விபரம் :
பல்கலைக்கழகம் :----.
விடயத்துறை :----.
பட்டம் வழங்கப்பட்ட திகதி :----.
மொழி மூலம் :----.

12. சட்டத்தரணியாகச் சத்தியப்பிரமாணம் செய்த திகதி :----.

13. சட்டத்தரணியாகத் தொழில் அனுபவம் :----. ஆண்டுகள்.

14. தற்போது சேவை செய்யும் இடம் :----.

15. தற்போது வகிக்கும் பதவி :----.

16. உரித்தான சேவை :----.

(i) நிறைவேற்றுச் சேவைகள் வகுதியின் பதவியொன்றில் நியமனம் பெற்ற திகதி :----.
(ii) நிறைவேற்றுச் சேவைகள் வகுதியின் பதவியில் சேவைக்காலம் :----.

17. விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தலின் 4 ஆம் பந்தியின்படி தகைமைகள் :

(i) ..................................................................................................................................
(ii) ..................................................................................................................................
(iii) ..................................................................................................................................
(iv) ..................................................................................................................................

18. விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தலின் 9 ஆம் பந்தியின்படி தகைமைகள் :

(i) ..................................................................................................................................
(ii) ..................................................................................................................................
(iii) ..................................................................................................................................
(iv) ..................................................................................................................................
(v) ..................................................................................................................................

19. மொழித் தேர்ச்சி (சம்பந்தப்பட்ட கூட்டினுள் ✓ அடையாளத்தை இடுக) :----.

| | மிகவும் நன்று | நன்று | சாதாரணம் | மிகக் குறைவு |
|---|---|---|---|---|
| சிங்களம் | | | | |
| தமிழ் | | | | |
| ஆங்கிலம் | | | | |

**விண்ணப்பதாரரின் உறுதியுரை :**

.............................................. ஆகிய நான், இதில் குறிப்பிட்டுள்ள தகவல்கள் யாவும் சரியானவை என்றும் உண்மையானவை என்றும், தெரிவித்துக்கொள்கிறேன். நான் அரசாங்க சேவையிலிருந்து விலக்கப்படவோ வினைத்திறமையின்மையின் காரணமாக சேவையிலிருந்து ஓய்வுபெறச் செய்யப்படவோ இல்லையெனவும் பதவியைக் கைவிட்டுச் சென்ற ஒருவராக கருதப்படவில்லை எனவும் அத்தாட்சிப்படுத்துகிறேன். இதில் அடங்கியுள்ள தகவல்கள் பொய்யானதென அல்லது பிழையானதென நான் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்னர் தெரியவருமிடத்து நான் தகுதியற்றவராவேன் என்றும் தெரிவுசெய்யப்பட்ட பின்னர் தெரியவருமிடத்து நட்டஈடு எதுவுமின்றி பதவி நீக்கம் செய்யப்படுவேன் என்றும் அறிவேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

**அரசாங்க சேவையிலுள்ள விண்ணப்பதாரர்களுக்காக திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

திரு./ திருமதி/ செல்வி ............................................ தற்போது இவ்வமைச்சில்/ திணைக்களத்தில் ........................................ .... ஆக சேவை செய்கின்றார் எனவும், அவரால் 14, 15, 16 ஆம் பந்திகளில் காட்டப்பட்டுள்ள தகவல்கள் சரியானவை எனவும், அவரால் அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு அல்லது ஒழுக்காற்று விசாரணைகள் நடைபெற்றுக்கொண்டு உள்ளதெனவும்/இல்லை எனவும் அவரது வேலை, வருகை, நடத்தை, செயலாற்றுகை திருப்திகரமானது/ திருப்திகரமற்றது எனவும் அத்தாட்சிப்படுத்துகிறேன்.

திரு./ திருமதி/ செல்வி ............................................ இப்பதவிக்குத் தெரிவுசெய்யப்பட்டால் அவரை பின்னுரிமையாளருடன்/ இன்றி சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/ முடியாது எனவும் அறிவித்துக்கொள்கிறேன்.

----,
அமைச்சின் செயலாளரின்/ திணைக்களத்
தலைவரின் கையொப்பம்
மற்றும் அலுவலக இலச்சினை.

அமைச்சு/ திணைக்களம் :----.
பெயர் :----.
பதவி :----.
திகதி :----.

*12-404*

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

திருத்தம்

**அரசாங்க சேவைகள் ஆணைக்குழு**

*2016*, நவெம்பர் *4* ஆந் திகதிய, *1992* ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி I : தொகுதி II(அ) இன்கீழ் பிரசுரிக்கப்பட்ட, ''இலங்கை கணக்காளர் சேவையின் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட/ திறந்த போட்டிப் பரீட்சை - *2016*'' இன்கீழ் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல்.

*4* ஆம் பிரிவின் தகைமைகளின் கீழ் *4.1* (அ) இன் (iii) ஆம் உப பிரிவு -

இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் அல்லது வேறு ஏதேனும் பொதுநலவாய நாடொன்றின் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தில் தகுதிச்சான்று அல்லது இடைநிலை பரீட்சை அல்லது அதனைவிட உயர் பரீட்சையொன்றில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தில் *2015* ஆம் ஆண்டுக்கு முன்னர் தகைமை பெற்றுள்ள விண்ணப்பதாரிகள்–

(i) தகுதிச் சான்று II பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அல்லது

(ii) இடைநிலைப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அல்லது

(iii) கணக்கீடு மற்றும் வியாபார சான்றிதழ் II பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தில் 2015 ஆம் ஆண்டுக்குப் பின்னர் தகைமை பெற்றுள்ள விண்ணப்பதாரிகள்–

(i) வியாபார படிமுறை பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

எனத் திருத்தப்படுதல் வேண்டும்.

4 ஆம் பிரிவின் தகைமைகளின் கீழ் 4.1 (ஈ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள 2016.11.04 ஆந் திகதியன்று (விளம்பரம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் திகதியன்று) 22 வயதிற்கு குறையாதிருக்க வேண்டியுள்ளதுடன், 28 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும், என்பது 2016.11.04 ஆந் திகதிக்கு 22 வயதிற்கு குறையாதிருக்க வேண்டியுள்ளதுடன், 30 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும் என திருத்தப்படல் வேண்டும். அதற்கமைய வயதெல்லை சம்பந்தமான தகைமை விண்ணப்பதாரியின் வயது 1994, நவெம்பர் 4 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் மற்றும் 1986, நவெம்பர் 4 ஆந் திகதி அல்லது அதற்கு பின்னராக இருப்பின் மாத்திரமேயாகும் எனவும் திருத்தியமைக்கப்படல் வேண்டும்.

8 ஆம் பிரிவில் விண்ணப்பிக்கும் முறையின்கீழ் (இ) பந்தியில் 2016.12.05 ஆக குறிப்பிடப்பட்டுள்ள திகதி 2016.12.30 ஆக திருத்தியமைக்கப்படல் வேண்டும்.

ஏற்கனவே விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகள் மீண்டும் விண்ணப்பிக்க வேண்டிய அவசியமில்லை.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

ஜே.ஜே. ரத்னசிறி,
செயலாளர்,
அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு.

கொழும்பு,
2016, திசெம்பர் 05.

12-773

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.